## ஏற்கனவே 5 பில்லியன் டாலர் முதலீடு பெற்ற நிலையில்

# தமிழ்நாடு அரசு திட்டமிட்டபடி 1 டிரில்லியன் முதலீடுகளைப் பெற முனைப்பு!

## ‘சி.என்.பி.சி.’ டி.வி.18 நியூஸ் தொலைக்காட்சி பாராட்டு!

**சென்னை, ஜூன் 24–**

**தமிழ்நாடு அரசு திட்டமிட்டபடி 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவு தொழில் முதலீடு செய்வதற்கு ஏற்ப முனைப்புடன் செயல்பட்டு வருவதாக சி.என்.பி.சி. டிவி 18 பாராட்டு தெரிவித்துள்ளது.**

**சி.என்.பி.சி. – டி.வி. 18 நியூஸ் தொலைக்காட்சியில் தமிழ்நாடு தொழில் துறையில் தொடர்ந்து முன்னேறி வருவது குறித்து ஒரு செய்திக் கட்டுரை ஒளிபரப்பாகி உள்ளது.**




அது வருமாறு:

தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் தொழில் முதலீடுகள் குவிந்த வண்ணம் உள்ளன. ஏற்கனவே 5 பில்லியன் டாலர் அளவிற்கு தொழில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் பெறப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தொழில் துறையில் எதிர்பார்த்த முதலீட்டை வெகு விரைவில் அடைந்துவிடும்.

ஏற்கனவே தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் என்கிறபோது தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தி தொடர்பான தொழில்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வருகிறது.

ஏற்கனவே 5 பில்லியன் அமெரிக்கன் டாலர் மதிப்பிலான தொழில்துறை ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருப்பதை பார்க்கும்போது, தொழில்துறையில் மேற்கொள்ள இருக்கும் முதலீட்டை எட்டுவதற்காக வேகவேகமாக முன்னேறி வருகிறது, என்றே கூறத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் செயிண்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை தனது உற்பத்தி நிறுவனத்தை ஏற்கனவே சென்னையில் நிறுவியுள்ளது. அதன் பங்கு என்று பார்க்கும்போது நாட்டின் மொத்த விற்பனையில் 98 சதவிகிதம் என்கிற அளவில் உள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் செயிண்ட் கோபைன் நிறுவன முதலீடு என்பது 3,750 கோடி ரூபாயாக உள்ளது. விரைவில் அந்த நிறுவனம் விரிவாக்கம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிறுவன அதிகாரி உன்னி கிருஷ்ணன் இது பற்றி குறிப்பிடுகையில், தமிழ்நாட்டில் எல்லா சூழல்களும் சாதகமாக உள்ளதால் எங்கள் உற்பத்தியும் மென்மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாது குஜராத் மாநிலத்திலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளுக்கு டிமாண்ட் ஏற்பட்டுள்ளது. அண்மையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் விரைவில் கோவை யில் எலக்ட்ரானிக் வாகன உற்பத்திக்காக 20 ஆயிரம் கோடி டாலர் முதலீடு செய்வது குறித்து அறிவிப்பு வெளியானது.

எதிர்கால தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு எலக்ட்ரானிக் வாகன உற்பத்திக்கு ஒன்றிய அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதனடிப்படையில் நாங்கள் இருக்கின்ற தொழில்நுட்பத்திறனுடன் மேலும் புதிய புதிய உத்தியுடன் எங்களது உற்பத்தியை அதிகரிப்பதில் ஆர்வமாக உள்ளோம் என்று அதன் துணைத் தலைவர் புனித் ஆனந்த் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு தொழில்துறையில் அதிக அக்கறையுடன் செயல்பட்டு, தொழில் முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து 2030–ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு எட்ட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. எரிசக்தி, உற்பத்தி, ஆட்டோமெடிக் பிரிவுகளில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு அரசு முனைப்பு காட்டி வருகிறது என்பதை குறிப்பிட்டு அந்நிறுவன செயல் அதிகாரி சம்பத் தெரிவித்து, அரசு மேற்கொண்டு வரும் செயல்பாடுகளை விவரித்தார்.

மருந்து தயாரிக்கும் ஜப்பான் நிறுவனமான ஓம்ரான் 15.7 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் சென்னைக்கு அருகில் பெருவயலில் தொழிற்சாலை தொடங்க உள்ளது.

அது மட்டுமின்றி மிட்சுபிஷி எலக்ட்ரானிக் நிறுவனம் தமிழ்நாட்டில் 230 மில்லியன் டாலர் முதலீட்டில் ஏர் கண்டிஷனர் தொழிற்சாலை தொடங்கி சுமார் 2000 பேருக்கு வேலைவாய்ப்பளிக்க உள்ளது.

அதுவும் தவிர மலேஷியாவின் பெட்ரோனாஸ் நிறுவனம் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் 4.1 பில்லியன் டாலர் முதலீட்டில் 4000 ஹெக்டர் புதிய தொழிற்சாலை தொடங்க உள்ளது.

இவைகள் தவிர, அமெரிக்க நிறுவனமான சிஸ்கோ, 1200 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டில் சென்னைக்கு அருகே தொழிற்சாலை நிறுவ உள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சி ஒன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்காக உள் கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தி வருவதால், மேலும் மேலும் தொழில் நிறுவனங்கள் இங்கு தொடங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. ஏற்கனவே அதற்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன என்கிற நல்ல செய்தி வந்த வண்ணம் உள்ளன என்கிறார் இந்திய தொழில் நிறுவன அமைப்பை (சி.ஐ.ஐ.) சேர்ந்த பாலி என்பவர்.

என்றாலும், தொழிற்சாலைகளுக்கு உகந்த சூழ்நிலைகளான இடம் கையகப்படுத்தல், போக்குவரத்து வசதி, ஏற்றுமதிக்கான வசதிகள், உள் கட்டமைப்புகள் உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு சவால்கள் இருக்கத்தான் செய்கின்றன.

அத்தகைய சவால்களை சந்திப்பதில் தமிழ்நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி, பிரச்சினைகளுக்கு இடம் தராமல், உலகளாவிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்கவும், அதற்காக தொழில் முதலீடுகளைப் பெறவும் உரிய வகையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு சி.என்.பி.சி. – டி.வி. 18 நியூஸ் தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மறைந்த முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம்

# தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூன் 24 -



முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்கள் (வயது 101 நேற்று முன்தினம், மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர் சபாநாயகம் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்

இரங்கல் செய்தி வருமாறு :-

மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், தமிழினத் தலைவர் கலைஞர் உள்ளிட்ட முதலமைச்சர்களுடன் பணியாற்றிய நூற்றாண்டு நாயகர் முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

விடுதலைக்கு முன்பான ஐ.சி.எஸ் காலத்தில் இருந்து தற்போதுள்ள ஐ.ஏ.எஸ் முறை வரை 70 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப்பணி வரலாற்றின் அடையாளமாகத் திகழ்ந்தவர். ஆட்சிப்பணிக்கு வருவதற்கு முன்பாக இராணுவத்திலும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். நேர்மையும் துணிச்சலும் தலைமைப் பண்பும் செயல்திறனும் ஒருங்கே அமையப் பெற்ற சபாநாயகம் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கடந்த ஆண்டு அவரது நூறாவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு அவரது சிறப்புகளை எடுத்துக்கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது மிகப்பெரும் பேறு. தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி, வாழ்வாங்கு வாழ்ந்து நிறைந்துள்ள அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

## முன்னாள் தலைமைச் செயலாளர்

# சபாநாயகம் உடல் - காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

*சென்னை, ஜூன் 24 -*

*முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.*

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு*

*மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், தமிழினத் தலைவர் கலைஞர் உள்ளிட்ட முதலமைச்சர்களுடன் பணியாற்றிய நூற்றாண்டு நாயகர் முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறேன்.*

*இந்திய ஆட்சிப் பணியில் தனக்கென ஒரு முத்திரை பதித்து, 70 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆட்சிப் பணி வரலாற்றின் அடையாளமாகத் திகழ்ந்தவர். ஆட்சிப் பணிக்கு வருவதற்கு முன்பாக இராணுவத்திலும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். நேர்மையும் துணிச்சலும் தலைமைப் பண்பும், செயல்திறனும் ஒருங்கே அமையப்பெற்ற சபாநாயகம் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் நன்மதிப்பைப் பெற்றவர்.*

*நூற்றாண்டுகளையும் கடந்து வாழ்வாங்கு வாழ்ந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களை கௌரவிக்கும் விதமாக அன்னாருக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும்.*

*இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

## நாடாளுமன்றக் கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு பரிந்துரையில்

# இருவரின் சிகிச்சைக்கு தலா ரூ.2.5 லட்சம் நிதி!

## பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது!

*புதுடெல்லி, ஜூன் 24-*

*திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சென்னை நந்தம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை மற்றும் சென்னை நெற்குன்றம் பகுதியைச் சேர்ந்த வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 19.05.2023 மற்றும் 22.05.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.*

*டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகிய இருவரின் புற்றுநோய் சிகிச்சைக்களுக்காகவும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.*



*இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு, 05.06.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:*

*பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் உதவித் தொகையான தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்திற்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

# சென்னை குடிநீர் ஏரிகளில் 59 சதவீதம் தண்ணீர் இருப்பு!

*சென்னை, ஜூன் 24-*

*சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரிகள் உள்ளன.*

*இந்த 5 ஏரிகளிலும் மொத்தம் 11,757 மில்லியன் கன அடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். கடந்த 3 நாட்களாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக குடிநீர் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.*

*செம்பரம்பாக்கம் ஏரிக்கு 1469 கன அடி வரை தண்ணீர் வந்தது. தற்போது மழை இல்லாததால் ஏரிகளுக்கு நீர்வரத்து குறைந்து இருக்கிறது.*

*நேற்று முன்தினம் காலை நிலவரப் படி குடிநீர் ஏரிகளில் மொத்தக் கொள்ளளவு 6,967 மி.கன. அடி தண்ணீர் உள்ளது. இது மொத்தம் கொள்ளளவில் 59 சதவீதம் ஆகும்.*

*புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3300 மி.கனஅடி.*

*இதில் 2244 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 258 கனஅடி தண்ணீர் வருகிறது. சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 1081 மி.கனஅடி. இதில் 386 மி.கனஅடி நீர் உள்ளது. ஏரிக்கு 12 கனஅடி மட்டுமே தண்ணீர் வருகிறது. பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவான 3231 மி.கன அடியில் 1347 மி.கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு 610 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. கண்ணன் கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியின் மொத்த கொள்ளளவான 500 மி.கன அடியில் 419 மி.கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து இல்லை.*



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத சங்கங்களின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. பல்வேறு சங்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விரைவில் அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மை செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இயக்குநர் முனைவர் அறிவொளி ஆகியோரும் உயர் கல்வி அலுவலர்களும் கலந்து கொண்டார்கள். இடம்: பேராசிரியர் கல்வி வளாகம், சென்னை